DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 79/2024

Prosecution Witness - P.W. 18

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சுப்பிரமணியன் |
| Father's Name | : | S. தாணுபிள்ளை |
| Village | : | தெரிசனங்கோப்பு |
| Taluk | : | தோவாளை |
| Calling | : | JE/D/ Boothapandy |
| Age | : | 51 |
| Date | : | 15.06.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2026.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

15.06.2026

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பூதப்பாண்டி மின்பிரிவு அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். 21.08.2023 அன்று நாவல்காடு, சல்வேஷன் ஆர்மி சர்ச்சுடைய பகுதியில் மின் இணைப்பு அன்று இரவு முழுவதும் மின் இணைப்பு இருந்தது. மின் தடை இருப்பதாக எங்கள் ஆவணங்களில் பதிவுகள் இல்லை. **இது சம்பந்தமாக நான் பூதப்பாண்டி காவல் ஆய்வாளரிடம் கொடுத்த அறிக்கை அ.சா.ஆ. 14**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

நாவல்காடு. சல்வேஷன் ஆர்மி சர்ச் அருகே அதன் சுற்றுவட்டாரங்களிலும் மின் தடங்கல் ஏற்படவில்லை என்று நான் கொடுத்த அ.சா.ஆ. 14 அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறது. அ.சா.ஆ. 14 அறிக்கையில் எங்கள் மின்வாரிய களப் பணியாளர்களோ, பொதுமக்களோ மின் தடை இல்லை என்று சொன்னதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். குறிப்பிட்ட நாளிலில், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் மின்சாரம் தடைப்படவில்லை என்ற விவரத்திற்கு எங்கள் அலுவலக கோப்புகளிலிலோ, SS செண்பகராமன்புதூர் மின்வாரிய அலுவலக கோப்புகளில் இருந்து பெறப்பட்ட தானியங்கி கருவிகளில் செயல்பட்டு கொண்டிருக்கிறது என்று ஆவணங்கள் அ.சா.ஆ. 14 அறிக்கையில் வைத்துள்ளேனா என்றால் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்வோம். அ.சா.ஆ. 14 அறிக்கை குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட இடத்தில் மின் தடங்கல் ஏற்படவில்லை என்று அறுதியிட்டு கூறமுடியாது என்றால் சரியல்ல.